# இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு அதன் 20ஆவது ஆண்டினைப் பூர்த்திசெய்துள்ளது.

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு, அதன் 20ஆவது ஆண்டு நிறைவை 01 மார்ச் 2021 அன்று கொண்டாடுகின்றது. இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு, இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நிறுவப்பட்டு. 01 மார்ச் 2021ஆம் திகதியில் இருந்து செயற்படுகின்றது.

காப்புறுதித்துறையின் ஒழுங்குமுறைப்படுத்துனராக, காப்புறுதிப் பூட்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் கடந்த 20 வருடமாக காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் அபிவிருத்திக்காக ஒழுங்குபடுத்தல்கள், மேற்பார்வைகள் மற்றும் வசதிகளை வழங்குகின்றது. இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் பிரதான நோக்கம் மற்றும் பொறுப்பாக, காப்புறுதிப் பூட்கையாளர்களினதும் உத்தேசக் காப்புறுதிப் பூட்கையாளர்களினதும் தேவைகளைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் விவேகமாக தொழில்சார் மற்றும் நேர்மையான முறையில் ஒருங்கிணைந்த காப்புறுதி வியாபாரத்தை இலங்கையினுள் உறுதிப்படுத்துதல் ஆகும்.

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு 2001ஆம் ஆண்டு நிறுவப்பட்டதிலிருந்து காப்புறுதித்துறையின் அபிவிருத்திக்கு ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளை உறுதியாக அமுல்படுத்தியுள்ளது. இந்த 20 ஆண்டுகளில் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு பல மைல் கற்களைக் கடந்துள்ளது. அவற்றில் பின்வருவன முக்கியமானவையாகும்,

1. காப்புறுதித்துறை அதன் குறிக்கோளை அடைவதற்கு அவசியமான விதிகள், விதிமுறைகள் மற்றும் வழிகாட்டல்களை விநியோகித்தல்.
2. 2000ஆம் ஆண்டு 43ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழிற்துறை சட்டத்தின் ஒழுங்குமுறைப்படுத்தல்கள் 2007, 2011 மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டன.
3. தெற்காசிய காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்துனர்களின் பேரவையை நிறுவுவதற்கான பணிகளை ஆரம்பித்ததுடன் 2001 டிசம்பரில் ஆரம்பக் கூட்டத்தை ஒழுங்கு செய்தது.
4. சர்வதேச நிர்ணய அமைப்பான காப்புறுதி மேற்பார்வையாளர்களுக்கான சர்வதேச சங்கத்தில் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது.
5. காப்புறுதி ஒம்புட்ஸ்மன் திட்டத்தை நிறுவுவதற்கு உதவியளித்தது.
6. இலங்கை காப்புறுதி நிறுவனத்தின் ஊடாக நடாத்தப்படும் காப்புறுதி முகவர்களாகத் தொழிற்படும் நபர்களுக்கான போட்டிப் பரீட்சையை அறிமுகப்படுத்தியது.
7. விதிகள் அடிப்படையிலான மூலதன சட்டகத்தில் இருந்து 2015ஆம் ஆண்டு இடர் அடிப்படையிலான மூலதன சட்டகத்திற்கு சென்றது.
8. இடர் அடிப்படையிலான மேற்பார்வை சட்டகத்தை வடிவமைத்து இணைத்துக்கொண்டது.
9. கலவை காப்புறுதிக் கம்பனி முறைமையை இல்லாது செய்து ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரமாக பிரித்து செயற்படுவதற்குக் கோரியது.
10. காப்புறுதியில் உள்ள கடன் நடைமுறையை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு தவணைக் கட்டணக் கொடுப்பனவு உத்தரவாத பந்தியை அறிமுகப்படுத்தியது.
11. பிணையங்கள் பரிமாற்றங்கள் ஆணைக்குழுவினால் அனுமதியளிக்கப்பட்ட பங்குப் பரிவர்த்தனையில் அனைத்துக் காப்புறுதிக் கம்பனிகளையும் பதிவுசெய்யுமாறு கோரியது.
12. கல்விப் பொதுச் சான்றிதழ் சாதாரண மற்றும் உயர்தரப் பரீட்சை வணிகப் பாடவிதானத்தில் காப்புறுதியை ஒரு விடயமாக அறிமுகப்படுத்துவதற்கு தேசிய கல்வி நிறுவனத்துடன் இணைந்து பாடவிதானத்தை உருவாக்கல்.

13. காப்புறுதிப் பூட்கையாளர்களின் முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக முழுமையான விசாரணைப் பிரிவினை நிறுவுதல் மற்றும் பிரிவு 98 இன் கீழ் காப்புறுதிக் கோரிக்கைகளைத் தீர்ப்பதற்கு வசதியளித்தல்.
14. 10ஆவது காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல்களுக்கான ஆசிய மாநாட்டை ''காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தலின் நிலவமைப்பை மாற்றுதல்'' எனும் தலைப்பின் கீழ் 2015 ஜுலையில் கொழும்பில் ஒழுங்குசெய்தமை.
15. ஒழுங்குமுறைப்படுத்துனரின் பெயரான இலங்கை காப்புறுதிச் சபை எனும் பெயர் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு என மாற்றப்பட்டது.
16. தேசிய காப்புறுதி நாளாக செப்டெம்பர் 01ஆம் திகதியைப் பிரகடனப்படுத்துமாறு கோரியது.
17. காப்புறுதி தொடர்பாக பொது மக்களை விழிப்பூட்டுவதற்கு கூட்டிணைந்த சமூகப் பொறுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.
18. காப்புறுதி தொடர்பாக வாடிக்கையாளர்களை அறிவூட்டுவதற்கு கல்வி நிகழ்ச்சிகள்/ பயிற்சிப் பட்டறைகள்/ செயலமர்வுகள் என்பவற்றை நாடளாவிய ரீதியில் நடாத்துதல்.

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு, அதன் 20ஆவது வருட நிறைவினை பின்வரும் வகையில் கொண்டாடும்,

**இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் வெப்தளத்தை** பயன்பாட்டாளர்களுக்கு விரும்பும் வகையிலும் மேலும் தகவல்களை உள்ளடக்கியும் **மீள நிறுவுதல்.**

**இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் YouTube Channel, Facebook and LinkedIn பக்கங்களை** காப்புறுதி தகவல்களைப் பரப்புவதற்காக நிறுவுதல்

**நீண்ட கால ஊழியர்களை அடையாளம் காணுதல்.**